| O.S.No. 156/2021 | DW1: திரு. பாலசுந்தரம்<br>த/பெ. திரு. ஏகாம்பரம் | 23-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது சொந்த ஊர் பல்லி கிராமம். வழக்கு சொத்து பல்லி கிராம எல்லையில் உள்ளது. 2-ம் பிரதிவாதி சாந்தா என் மனைவி ஆவார். 1-ம் வாதி சந்திரா அம்மாளின் கணவர்தான் குப்பன் ஆவார். குப்பனுடைய தகப்பனார் முருகன். முருகன், சித்திரை ஆகிய இருவரின் மணியின் குமாரர்கள். வழக்கு சொத்து முருகன், சித்திரை ஆகியோரின் மூதாதையரின் சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். முருகனும், சித்திரையும் அவர்களுக்குள் எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. முருகன் இறந்தபிறகு முருகனுடைய மகன் குப்பனும், சித்திரை ஆகிய இருவரும் வாய்மொழியாக குடும்ப சொத்து குறித்து ஒரு ஏற்பாடு செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி விஷயங்கள் எனக்கு நன்கு தெரியும். சித்திரைக்கு பாகமாக வந்த சொத்தினை அவர் அனுபவித்து வந்து அவர் இறந்த பிறகு அவரது மகன் கன்னியப்பன் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்கள் குப்பனுக்கு பாகமாக வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 வாதிகள் குப்பனுடைய மகள்கள் என்றால் சரிதான். குப்பனுக்கு பாகமாக வந்த சொத்தில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் அதில் உரிமை உண்டு என்று சொன்னால் சரிதான்.

3. குப்பன் இறந்து 20, 30 ஆண்டுகள் இருக்கும். குப்பன் இறப்பதற்கு முன்பு 2-ம் வாதி சந்திரா படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல, நன்றாக இருந்தார். அவரால் தன்னிச்சையாக செயல்பட முடியாது என்பதால் அவரது தாய் வீட்டிற்கே சென்றுவிட்டார்

என்றால் சரியல்ல. குப்பன் இறந்ததிலிருந்து சந்திரா அம்மாளை அவரது தாய் வீட்டில்தான் சவரட்சணை செய்தார்கள் என்றால் இல்லை, கடைசி காலத்தில் மட்டுமே சவரட்சணை செய்யப்பட்டது. வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளை படித்து பார்த்தேன். சந்திரா அம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது. சந்திரா அம்மாளுக்கு கல்வி அறிவு இல்லாததை பயன்படுத்திக்கொண்டு நாங்கள் கிரையம் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல, அவர்தான் கையெழுத்து போட்டு கொடுத்தார்.

4. 1–வது அயிட்ட சொத்தில் கன்னியப்பனுக்கு 1 ஏக்கர் 1 சென்ட் சொந்தம் ஆகும். அந்த 1 ஏக்கர் 1 சென்ட் கன்னியப்பனுக்கு அவரது தந்தையின் பாகப்பிரிவினையின்மூலம் கிடைத்ததாகும். அந்த சொத்தானது பூர்வீக சொத்து ஆகும். கன்னியப்பனுக்கு குப்பன் எந்த சொத்தையும் கிரையம் கொடுக்கவில்லை. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் சந்திரா அம்மாளும், கன்னியப்பன் ஆகிய இருவரும் கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குப்பன் கன்னியப்பனுக்கு எந்த கிரையமும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். கன்னியப்பன் வாங்கியதாக சொல்லி எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.12 கிரைய பத்திரத்தில் கிரையம் கொடுத்தவர்கள் என்று சந்திரா அம்மாள் மற்றும் கன்னியப்பன் ஆகியோரின் கையெழுத்து மட்டுமே உள்ளது என்றால் சரிதான். குப்பனின் பெண் வாரிசுகள் கையொப்பமிட்டதாக கிரைய பத்திரத்தில் இல்லை

என்றால் சரிதான், ஆனால் அவர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள்.

6. சாட்சி கையெழுத்தில் கவிதா த/பெ. தட்சிணாமூர்த்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயலட்சுமி, பாப்பம்மாள் ஆகியோர் 3-ம் பிரதிவாதி கன்னியப்பனின் உடன்பிறந்த சகோதரிகள். பி.சா.ஆ.12 கிரைய பத்திரத்தில் குப்பனின் மகள்கள் கிரையம் கொடுத்ததாக குறிப்பிட்டு எழுதப்படாததால் அந்த கிரைய பத்திரம் 2 முதல் 4 வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.12 கிரைய பத்திரத்தில் சந்திரா அம்மாள் தன்னுடைய குமாரத்திகளுக்காக கிரையம் செய்து கொடுப்பதாக வாசகங்கள் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

7. பி.சா.ஆ.12 கிரைய பத்திரமானது நானும், கன்னியப்பனும் சேர்ந்து மோசடியாக உருவாக்கிக்கொண்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. சந்திரா அம்மாள் அவருக்கு சொந்தமான சொத்தினை கிரையம் செய்யவில்லை என்றால் சரியல்ல. குப்பன் இறந்தபிறகு சந்திரா அம்மாள் குடும்பத்தை நிர்வாகம் பார்த்து வந்தார் என்று சொல்வது பொய் என்றாலும், அந்த அளவிற்கு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றாலும் சரியல்ல, அவர் நல்ல உடல் நிலையில் இருந்தார். சந்திரா அம்மாள் மகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்காகவும், மகனுக்கு டிராக்டர் வாங்கி கொடுப்பதற்காகவும் சொத்தினை விற்பனை செய்தார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறுதான் விற்பனை செய்தார். அவ்வாறு பி.சா.ஆ.12 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அதில் குடும்ப செலவிற்காகவும், நிலம் வாங்குவதற்காகவும் என்று எழுதப்பட்டுள்ளது. சந்திரா அம்மாள் நிலம் எதுவும் வாங்கவில்லை.

8. கன்னியப்பன் மோசடி செய்து சந்திரா அம்மாளை ஏமாற்றி பி.சா.ஆ.12 ஆவணத்தை எழுதி வாங்கிக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. குப்பன் உயிருடன் இருந்தபோதே அவரது மகள்களாக கவிதா, அம்மாயி ஆகியோர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். குப்பன் உயிருடன் இருந்தபோதே அனைவருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், கிரைய தொகையை வைத்து மகள், மகனுக்கு திருமணம் செய்து வைத்ததாகவும், வீட்டினை பழுது பார்த்தார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியலல.

9. சந்திரா அம்மாள் 25 வருடங்களுக்கும் மேலாக படுத்த படுக்கையாக இருந்தார் என்றாலும், செயல்படக்கூடிய அளவில் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் சந்திரா அம்மாள் படுத்த படுக்கையாக இருந்து கைநாட்டு வைத்தார் என்றால் இல்லை, அவர் நன்றாகத்தான் இருந்தார். பி.சா.ஆ.12 கிரையத்திற்காக சந்திரா அம்மாள் என்னிடம் எந்தவொரு தொகையும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சந்திரா அம்மாளிடமிருந்து எவ்வளவு விஸ்தீரனமுள்ள இடத்தினை கிரையம் வாங்கினீர்கள் என்றால் 1 ஏக்கர் 22 சென்ட்டினை கிரையம் வாங்கினேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பேசினீர்கள் என்றால் ரூ.69,600/-க்கு பேசினேன், பக்தன், கஜேந்திரன் ஆகிய இருவரும் முன்நின்று கிரையம் பேசினார்கள்.

10. பொதுவாக ஒரு சொத்தினை கிரையம் பேசினால் 1 சென்ட் இவ்வளவு என்று பேசுவார்கள் என்றால் சரிதான். ஆனால், இந்த கிரையத்தில் தோராயமாக பேசப்பட்டது. நான் கிரைய தொகை ரூ.69,600/- கொடுத்து கிரையம் வாங்கினேன். நான் வாங்கிய கிரைய

பத்திரத்திலும் அவ்வாறான தொகையும், விஸ்தீரனமும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரைய தொகையை யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் சந்திரா, கன்னியப்பன், கவிதா, மாரியிடம் கொடுத்தேன். நான் சந்திரா அம்மாளிடம் கிரைய தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால், என்னுடைய கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகள் கிரைய பத்திரத்தில் தரப்பினர் இல்லை என்பதால் அந்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சாட்சிகள் என்ற முறையில் அவர்கள் கிரையம் கொடுத்ததாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.23 13:05:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**